Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 173/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW11** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | நாகராஜன் |
| Father/Husband Name | : | நாகுசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | தலைமைக்காவலர் |
| Religion | : | |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

<u>(எதிரி ஆஜர். )</u>

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் காவல்நிலையத்தில் கடந்த 3 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.01.2025ம் தேதி பாம்பன் காவல நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியியில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த பாம்பன் காவல் நிலைய குற்ற எண்.6/2025 சட்ட பிரிவு 103(1) BNS வழக்கில் இறந்த நபரான ஜோசப்கென்னடி வயது 58 த/பெ.மனுவேல், அக்காள்மடம் காலனி, பாம்பன் என்பவருடைய இறப்பிற்கான காரணம் அறிய பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்கு கொடுத்த வேண்டுகோள்

கடிதத்தை மருத்துவ அதிகாரியிடம் கொடுத்தேன், பின்பு மருத்துவ அதிகாரியிடம் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை நல்லடக்கம்செய்ய அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பிறகு பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட மஞ்சள் கருப்பு கட்டம்போட்ட இரத்தம்படிந்த டீசர்ட், வெள்ளை கருப்பு அரக்கு கலர்கோடுபோட்ட ஊதா நிற இரத்தம்படிந்தகைலியை பெற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். பின்பு 03.02.2025 ம் தேதி இராமேஸ்வரம் நீதித்துறை நடுவர் அவர்களிடம் PR.No.12/2025 ன் பிரகாரம் ஒப்படைக்கப்பட்ட மேற்சொன்ன இரத்தம்படிந்த டீசர்ட் மற்றும் கைலியை நீதிமன்றத்திலிருந்து பெற்று இராமநாதபுரம் வட்டார தடயவியல் ஆய்வகத்தில் இரசாயன பரிசோதனைக்கு ஒப்படைத்தேன். பின்பு 04.02.2025 ம் தேதி இராமேஸ்வரம் நீதித்துறை நடுவர் அவர்களிடமிருந்து பிரேதத்தின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உள்ளுறுப்புக்களை இரசாயன பரிசோதனை செய்வதற்காக கடிதம் பெற்று இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் கொடுத்து பின்பு சேகரித்து வைக்கப்பட்டிருந்த உடல் உள்ளுறுப்புக்களை பெற்று இராமநாதபுரம் வட்டார தடயவியல் ஆய்வகத்தில் இரசாயன பரிசோதனைக்கு ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:- இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 173/2025** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW12** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர்.கண்ணன் |
| Father/Husband Name | : | ராமபாண்டியன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | மருத்துவர் |
| Religion | : | |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

<u>(எதிரி ஆஜர். )</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எலும்பியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2025 ம்தேதி இரவு 09.06 மணியளவில் இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது 60 வயது மதிக்கத்தக்க ஜோசப்கென்னடி என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவரது மனைவி மரியபாக்கியம் கொண்டுவந்தார். அவரை பரிசோதித்தபோது அவர் ஏற்கனவே இறந்துவிட்டது தெரிந்தது. நான் ஜோசப் கென்னடியின் உடலை பிரேத பரிசோதனைக்காக பிணவறைக்கு அனுப்பி வைத்தேன்.

நான் தயாரித்து வழங்கிய விபத்து பதிவேடு அறிக்கை **அ.சா.ஆ.8**. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

இராமநாதபுரம்அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் புறக்காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். உயிரற்ற நிலையில் ஒருநபர் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டால் மருத்துவமனையில் இயங்கிவரும் புறக்காவல் நிலையத்திற்கு உடனே தகவல் தெரிவிப்போம் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் அவ்வாறு தெரிவித்தேன் என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.